மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : கச்சா முந்திரி ஒதுக்குவதை, மத்திய சர்க்காருக்கு உட்பட்ட கொச்சியில் உள்ள இந்திய முந்திரி நிறுவனம் செய்து வருகிறது. அதிக அளவிற்கு தமிழகத்திற்கு ஒதுக்குமாறு தமிழக அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : தமிழகத்தில் முந்திரிப் பயிரின் விளைச்சலை அதிகப்படுத்துகிற திட்டம் அரசிடம் இருக்கிறதா ? கன்னியாகுமரி மாவட்டத்திலும், பிற மாவட்டங்களிலும் முந்திரியைப் பயிரிட ஊக்குவிக்கும் வகையில் சப்சிடியைக் கொடுத்து உதவ அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : முந்திரியை அதிக அளவு உற்பத்தி செய்ய வனத் துறையும், வேளாண்மைத் துறையும் அதிக முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கின்றன.

திரு. ஆ. நல்லசிவன் : சுமார் 75,000 தொழிலாளர்கள் வேலை செய்யும் 150 முந்திரி ஆலைகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்றன. அங்கே ஆண்டில் நான்கைந்து மாதங்களுக்குத்தான் அவர்களுக்கு வேலை இருக்கின்றது. முந்திரிக் கோட்டாவை ஒதுக்குவதில் ஏற்கெனவே கேரளாவிற்குத் தான் முன்னுரிமை அளிக்கப்படுவதாகத் தெரிகிறது. தமிழ் நாட்டில் 75,000 தொழிலாளர்கள் வேலையின்றி தவிப்பதால், தமிழகத்திற்கு உரிய பங்கைப் பெற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தமிழக அரசு, அதிக அளவு தேவை என்பதை மத்திய அரசிடம் வலியுறுத்தி, நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகள்.

* 88 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980, செப்டம்பரில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள சுமார் 850 சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகள், தொடர்ந்து சில நாட்கள் மூடப்பட்டிருந்தன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணங்கள் யாவை ?

(உ) அரசுக்கு அதுபற்றி முறையீடு ஏதும் வந்துள்ளதா ?

(ஊ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

1981 பிப்ரவரி 27]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (இ) கலால் வரி உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக சில தீப்பெட்டித் தொழிலதிபர்கள் 22—9—1980-லிருந்து 24—9—1980 வரை 3 நாட்கள் தங்கள் தொழிற் சாலைகளை மூடினர்.

(உ) மற்றும் (எ) இந்த கலால் வரி மத்திய அரசின் அதிகார வரம்பிற்குள் வருவதால், மாநில அரசு இதன் மீது நடவடிக்கை எடுப்பதற் கில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : மத்திய அரசின் கலால் வரி உயர்வால் தமிழகத்தில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மிகவும் பாதிக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதனால் பல தொழிலாளர்கள் வேலையின்றி தவிக்கும் நிலை உருவாகியிருக்கிறது. மாநில அரசு, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு சிறு தொழில்களுக்குக் கலால் வரியைக் குறைக்க, தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : ஏற்கெனவே சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்குச் சலுகைகள் இருக்கின்றன. மத்திய அரசு, தீப்பெட்டி உற்பத்தியாளர்களை மூன்று தரமாகப் பிரித்துள்ளது. ஒன்று, இயந்திரங்கள் மூலம் தீப்பெட்டி உற்பத்தி செய்யும் "விம்கோ" நிறுவனம்; இரண்டு, உற்பத்தி வரம்பின்றி கையால் செய்யப்படும் தீப்பெட்டிகள்; மூன்று, குடிசைத் தொழிலில் உற்பத்தி செய்யும் தீப்பெட்டிகள் என்று மூன்று வகையாகப் பிரித்து மூன்று வகையான கலால் வரி விதிக்கப்படுகிறது. முதல் வகைக்கு குரோஸ் ஒன்றுக்கு ரூ. 7.20, இரண்டாவது வகைக்கு குரோஸ் ஒன்றுக்கு ரூ. 4.50, மூன்றாவது வகைக்கு ரூ. 1.60 கலால் வரியாக விதிக்கப்படுவதால், சிறு தொழிலில் உற்பத்தி செய்பவர்கள் பாதுகாப்பாக இருக்கிறார்கள்.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

Master Plan for Kodaikanal.

* 89 Q.—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have prepared a Master Plan for the development of Kodaikanal ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) when it is likely to be implemented ?